**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

U/S 173 BNSS

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8120326

1. District : மாவட்டம் சிவகங்கை PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 11/2024 Date: நாள் 24.10.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Prevention of corruption Act 1988 Sections பிரிவுகள்: 7

(iii) Act சட்டம்: BNSS Act 2023 Sections பிரிவுகள்: 106

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 23.10.2024 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30 hrs Time to : நேரம் வரை 22.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2024 Time நேரம் 17.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol III Time நேரம் 17.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 60 KM வடக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி இலுப்பை மற்றும் பட்டுப் பணிகள் நிலையம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு R. காமராஜ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராமு

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 5.1.1966 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி துணை கண்காணிப்பாளர் அலுவலகம், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு S. நவநீதகிருஷ்ணன், த/பெ சோமன், நிலைய பொறுப்பாளர், இலுப்பை மற்றும் பட்டுப் பணிகள் நிலையம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்
2. திரு ஈ. செல்வம், த/பெ மணி, VGLF 7364, இலுப்பை மற்றும் பட்டுப் பணிகள் நிலையம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 24.10.2024 தேதி 17.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள், துணை ஆய்வுக்குழு அலுவலர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.R.காசிநாததுரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 24.10.2024-ம் தேதி 17.15 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2024 u/s. 7 of Prevention of Corruption Act 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 and sec.106 BNSS Act 2023-ன்படி வழக்கு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் T.R. [handwritten] பதவி [handwritten] நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. [signature] 24/10/24 — A. Kannan, INSP. VLAC, 24/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24/10/2024 at 1815 hrs.

Name: பெயர் A.KANNAN
Rank: நிலை Inspector of Police, VLAC Sivaganai

பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் R.காசிநாததுரை, த/பெ.ராமு, முதுநிலை வருவாய் ஆய்வாளர், துணை ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள், பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. நாள்:24.10.2024, பொருள் : சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலைய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வு சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கக் கோருதல் தொடர்பாக. பார்வை : இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் நாள்:23.10.2024, 23.10.2024ம் தேதி சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிலிருந்து தொடர்புகொண்டு, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலைய அலுவலர் திரு.நவநீதகிருஷ்ணன் உத்தரவின்பேரில், Upgraded Leading Fireman திரு.செல்வம் என்பவர் தீபாவளி பண்டிகையையொட்டி பட்டாசுக்கடைகள், ரைஸ் மில், திருமண மஹால், லாட்ஜ்கள் மற்றும் வணிக வளாகங்களில் லஞ்சமாக பணம் வசூல் செய்து, அவருடைய TN63BY 8181 பதிவெண் கொண்ட Honda Grazia சிவப்பு நிற இருசக்கர வாகனத்தில் வருவதாக இரகசிய தகவல் உள்ளதாக தெரிவித்ததன் பேரில், 23.10.2024-ஆம் தேதி மதியம் சுமார் 15.00 மணிக்கு குழுவினருடன் காரைக்குடி அரசு மருத்துவமனை எதிரே நின்று கண்காணித்த போது, அவ்வழியே Upgraded Leading Fireman திரு.செல்வம் மேற்படி அவரது இருசக்கர வாகனத்தில் வந்தார். அவரிடம் துணை ஆய்வுக்குழுவினர் அறிமுகப்படுத்திக்கொண்டு, அப்பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாவண்ணம், மேற்படி செல்வத்தை அவரது இருசக்கர வாகனத்துடன் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, இராமேஸ்வரம்-திருச்சி தேசிய நெடுஞ்சாலை அருகே, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே அமைந்துள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலைய அலுவலகத்திற்கு சுமார் 15.30 மணிக்கு அழைத்து வந்து, அவ்வலுவலகத்தில் இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திரு.அ.கண்ணன் மற்றும் குழுவினருடன் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த தீயணைப்பு நிலைய அலுவலர்

திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் தீயணைப்போர்களிடம் துணை ஆய்வுக்குழுவினர் அறிமுகம் செய்துகொண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையில், Upgraded Leading Fireman 7364 திரு.M.செல்வம், த/பெ.மணி என்பவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ரூ.800/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் தனது கை செலவுக்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால், அந்தப்பணம் ரூ.800/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது TN63 BY 8181 பதிவெண் கொண்ட Honda Grazia இருசக்கர வாகனத்தை சோதனை செய்த போது, அதன் சீட்டின் அடியில் கத்தை கத்தையாக பணம் ரூ.60,510/- (Rs.500 X 121, Rs.10 X 1) மற்றும் கையடக்க Note Books - 2 No's ஆகியவை இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.நவநீத கிருஷ்ணன் அவர்களது உத்தரவின்பேரில் காரைக்குடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் அமைந்துள்ள பட்டாசுக்கடைகள், ரைஸ் மில் மற்றும் முக்கிய வணிக வளாகங்களில் தீபாவளிக்கு வசூல் செய்ததாகவும், 2 கையடக்க Note Book-களில் முதல் பக்கத்தில் காரைக்குடி தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலைய முத்திரையிட்டு (Office Round Seal), அவற்றில் வசூல் விபரங்களை எழுதி வைத்திருந்ததாகவும், இன்றைக்கு வசூல் செய்த பணம் ரூ.60,510/-த்தை பைக்கின் சீட்டுக்கு அடியில் வைத்திருந்ததாகவும் கூறினார். எனவே மேற்படி லஞ்சப்பணம் ரூ.60,510/- மற்றும் மேற்படி 2 Note books விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்திலிருந்த தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.S.நவநீதகிருஷ்ணன், த/பெ.சோமன் என்பவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ரூ.830/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் டீ மற்றும் சாப்பாட்டு செலவுக்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அந்தப்பணம் ரூ.830/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த திரு.க.ரமேஷ்குமார், த/பெ.கருப்பையா, தீயணைப்போர் எண்.10665 என்பவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் பணம் ரூ.650/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் போக்குவரத்து செலவுக்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததனால், அந்தப்பணம் ரூ.650/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரை விசாரணை செய்தபோது, தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.நவநீத கிருஷ்ணன்

உத்தரவின்பேரில், முதுநிலை முன்னணி தீயணைப்போராக (UGLF 7364) பணிபுரிந்து வரும் திரு.செல்வம் என்பவர் தீபாவளி பண்டிகைக்காக பட்டாசு கடைகள், ரைஸ் மில், முக்கிய வணிக வளாகங்களில் வசூல் செய்து வந்ததாகவும், இன்றைய தினம் வெளியில் அலுவல் சம்மந்தமாக ஒரு இடத்திற்கு செல்ல வேண்டுமென்றும், உடன்வருமாறு அழைத்ததன் பேரில், அவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், அப்போது அவர் காரைக்குடி கல்லூர், புதுவயல் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்று ரைஸ் மில் உள்ளிட்ட பல இடங்களில் பணம் வசூல் செய்து, அந்தப்பணத்தை அவரது Honda Grazia பைக்கில் சீட்டிற்கு அடியில் வைத்துக்கொண்டதாகவும், தன்னை அலுவலகத்தில்இறக்கிவிட்டு விட்டு அவர் சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும், அவர் சீனியர் அலுவலர் என்பதால், அவர் அழைத்ததை மறுக்க முடியாமல் அவருடன் சென்றதாகவும், தான் யாரிடமும் பணம் வசூல் செய்யவில்லை எனவும் தெரிவித்தார். இந்த திடீர் சோதனையின்போது, தீயணைப்பு நிலைய அலுவலகத்தில் வடமேற்குப்பகுதியில் அமைந்துள்ள பணியாளர்கள் ஓய்வு அறை-1ல் தெற்குப்பகுதியிலிருந்த கபோர்டில் கத்தை கத்தையாக பணம் ரூ.64,000/- (Rs.500 X 128) இருந்தது. மேற்படி பணம் குறித்து தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.நவநீத கிருஷ்ணன் மற்றும் அலுவலர்களிடம் விளக்கம் கேட்டபோது, யாரும் சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினால், மேற்படி கணக்கில் வராத பணம் ரூ.64,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த திரு.V.கந்தசாமி, த/பெ.வெங்கடாசலம், முன்னணி தீயணைப்போர் எண்.7489 என்பவரை சோதனை செய்தபோது, அவரது மணி பர்சில் ரூ.1370/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் சொந்த ஊரான தூத்துக்குடியில் இருந்து இன்றுதான் பணிக்கு வந்ததாகவும், இங்கேயே தங்கி வேலை செய்வதாகவும், அதனால் சாப்பாட்டு செலவிற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்ததனால், அந்தப்பணம் ரூ.1370/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த திரு.N.அமர்நாத், த/பெ.நாராயணன், தீயணைப்போர் எண்.11145, நிலைய எழுத்தர் என்பவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் எதுவும் இல்லை. நிலைய அலுவலர் அறையிலிருந்த நிலைய எழுத்தர் அமர்நாத் இருக்கைக்கு முன்பிருந்த கணிணி மேஜையின் ட்ராயரில் மருத்துவமனை, விடுதி, மஹால் உள்ளிட்ட பகுதிகளில் லஞ்சப்பணம் வசூல் செய்தது தொடர்பான குறிப்புகள் அடங்கிய ஆவணம் இருந்தது. அது குறித்து நிலைய

எழுத்தர் திரு.அமர்நாத்திடம் கேட்டபோது, கடந்த செப்டம்பர் மாதம் தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.நவநீதகிருஷ்ணன் உத்தரவின் பேரில் திரு.செல்வம் முதுநிலை முன்னணி தீயணைப்போர் வசூல் செய்து மேற்படி நிலைய அலுவலருக்கு கொடுத்த பணம் தொடர்பாக எழுதிய குறிப்பு என்று கூறினார், மேற்படி லஞ்சப்பணம் வசூல் தொடர்பான குறிப்புகள் அடங்கிய ஆவணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த திரு.K.மாரிமுத்து, த/பெ.கருப்பையா, தீயணைப்போர் எண்.10919 என்பவரை சோதனை செய்தபோது, அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.2,770/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவரது வீட்டிற்கு மின் கட்டணம் செலுத்துவதற்காக கொண்டு வந்திருந்ததாகவும், மின்கட்டணம் தொடர்பாக அவரது அலைபேசிக்கு வரப்பெற்ற குறுஞ்செய்தியை காண்பித்து உரிய விளக்கம் தெரிவித்ததனால், அந்தப்பணம் ரூ.2,770/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த திரு.S.சுந்தர் நிஷாந்த், த/பெ.சுந்தர் ரமேஷ், தீயணைப்போர் எண்.10770 என்பவரை சோதனை செய்தபோது, அவரது மணி பர்சில் ரூ.170/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் பெட்ரோல் செலவுக்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததனால், அந்தப்பணம் ரூ.170/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த திரு.N.கோபு, த/பெ.நடராஜன், தீயணைப்போர் எண்.10339 என்பவரை சோதனை செய்தபோது, அவரது மணி பர்சில் ரூ.60/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் கை செலவுக்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததனால், அந்தப்பணம் ரூ.60/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த திரு.S.பிரபாகரன், த/பெ.சேகர், தீயணைப்போர் எண்.10266 என்பவரை சோதனை செய்தபோது, அவரது மணி பர்சில் ரூ.1200/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் திருப்புவனத்திலிருந்து அலுவலகத்திற்கு வந்து செல்வதனால், கை செலவுக்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததனால், அந்தப்பணம் ரூ.1200/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலக ரொக்கப்பதிவேட்டினை சரிபார்த்ததில் கையிருப்புத்தொகை ஏதுமில்லை. பின்னர், விசாரணைக்காக கேட்டதன் பேரில் தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.நவநீத கிருஷ்ணன் ஆஜர் செய்த, 1) 2024ம் ஆண்டிற்கான மாவட்ட அலுவலர் தீ உரிமம் / தடையின்மைச்சான்று பதிவேடு, 2) 2024ம் ஆண்டிற்கான

பணிப்பதிவேடு, 3) 2024ம் ஆண்டிற்கான தன் பதிவேடு, 4) 2024ம் ஆண்டிற்கான பட்டியல் அழைப்பு பதிவேடு, 5) 2024ம் ஆண்டிற்கான ஏவலறை பதிவேடு, 6) 09.10.2024 தேதி முதல் 23.10.2024ம் தேதி வரையிலான பொதுநாட்குறிப்பு மற்றும் 7) காவலர் விடுப்புப்பதிவேடு (பாரா மாற்றுப்பதிவேடு) ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தில் பணியிலிருந்த 1) தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.S.நவநீதகிருஷ்ணன், 2) திரு.செல்வம், 3) திரு.ரமேஷ்குமார், 4) திரு.கந்தசாமி, 5) திரு.அமர்நாத், 6) திரு.மாரிமுத்து. 7) திரு.சுந்தர் நிஷாந்த், 8) திரு.கோபு மற்றும் 9) திரு.பிரபாகரன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். திடீர் சோதனை தொடர்பான செயல்முறை நடவடிக்கை குறிப்புகள் 23.10.2024-ம் தேதி 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் இணைச்சோதனையின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத லஞ்சப்பணம் மொத்தம் ரூ.1,24,510/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி நான்காயிரத்து ஐநூற்றி பத்து), ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் இணைத்துள்ளேன். இந்த திடீர் சோதனை சம்மந்தமாக திரு.நவநீதகிருஷ்ணன், தீயணைப்பு நிலைய அலுவலர் மற்றும் திரு.செல்வம், முதுநிலை முன்னணி தீயணைப்போர் எண்.7364 ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு மேற்கண்டவாறு. இப்படிக்கு ஒப்பம் R.காசிநாததுரை.

Sir, Received the complaint on 24.10.2024 at 17.00 hrs. Found prima facie for the allegation of the complaint. Since, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai, obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime.No.11/2024 u/s 7 of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 and sec.106 BNSS Act 2023 on 24.10.2024 at 17.15 hrs. sd.A.Kannan, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும்; நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. Kannan
INSP/V&AC
24/10/2024
Inspector of Police
Vigilance & Anti- Corruption
Sivagangai.